**தலைப்பு 336 – வணிகக் கப்பற்றுறைச் செயலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 336 – வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலகக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் குறிப்பிடுகின்றறேன்.

செயலகம் 2021 ஆம் ஆண்டின் போது துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் கீழ் செயற்திட்டமொன்றாக நிறுவப்பட்டிருந்த காரணத்தால் மற்றும் 2022 ஆம் ஆண்டு முதல் தனியானதொரு செலவினத் தலைப்பின் கீழ் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அதன் காரணமாக கடந்த வருடத்திற்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் காணப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைச்சேரியின் கணக்கு கூற்று 30(SA-30) இன் பிரகாரம் வைப்புக் கணக்கில் ஆண்டுக்குரிய வைப்பு பெறுவனவுகள் மற்றும் வைப்பு கொடுப்பனவுகளின் பெறுமதி உள்ளடக்கப்பட்டிராத போதிலும் செயலகத்தில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றில் வைப்பு பெறுவனவாக ரூபாய்.669,450 மற்றும் வைப்பு செயலத்தல்களாக ரூபாய்.669,450 காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் பொது வைப்பு கொடுக்கல் வாங்கல்கள் CIGAS இல் தலைப்பு இலக்கம் 176 இன் கீழ் பொது வைப்பு கணக்கு இலக்கம் 6000-0-0-18-0-118 இற்கு கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் அது தலைப்பு இலக்கம் 336 இன் கீழான பொது வைப்பு கணக்கு இலக்கம் 6000-0-0-18-0-180 இற்கு கணக்கு வைக்கப்பட வேண்டும்.<br><br>அதனை திருத்துவதற்கு தேவையான மாற்றல் பத்திரங்கள் தயாரிக்கப்பட்ட போதிலும் ஆண்டின் இறுதியில் TR Code activate இடம் பெறாத காரணத்தால் உரிய மேலதிக நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. | 2022 டிசம்பர் 13 ஆம் திகதிய பொது கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2022/05 இன் ஏற்பாடுகளுக்கு அமைய நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளமை. |

## (ஆ) கட்டுநிதி மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கட்டுநிதி இணக்கக் கூற்றில் (ACA-7) ஏனைய நிறுவனங்களினால் அறிக்கையிடும் நிறுவனத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபாய்.54,476 ஆன தொகை 2022 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான செயலவின கூற்றில் ACA-2(ii) காண்பிக்கப்படவில்லை. | ஏனைய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட செயலவினங்களை திரண்ட பரீட்சை மீதியில் சீராக்கியுள்ளமையால் ACA-2(ii) மாதிரிக்கு சீராக்கப்படுதல் தவறவிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் உரிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவித்து அறிவுரை வழங்கப்பட்டது. | தரவுகளை சரியாகவும் முழுமையாகவும் உள்ளடக்கி நியாயமானதும் உண்மையானதுமான நிலைமைகளை வெளிப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |
| (ii) | கட்டுநிதி இணைக்கக்கூற்றின் (ACA-7) ஏனைய தலைப்புகளுக்கு அறிக்கையிடப்படும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட செயலவினம் ரூபாய்.6,978,240 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சிகாஸ் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியில் ஏனைய தலைப்புகளுக்கு அறிக்கையிடப்பட்ட நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட செவவினமாக ரூபாய்.6,976,901 காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் வருமானக் கணக்குகளிடையே இடம்பெற்ற சீராக்கம் ஒன்று நிதிக்கூற்றுக்களின் முன்னைய பணிகளில் இரு தடவைகள் சீராக்கப்பட்டுள்ளதுடன் அதுவும் சீராக்கங்களில் இரட்டை பதிவின் தாக்கம் காரணமாகவும் இவ் வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | 2022 டிசம்பர் 13 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2022/05 இன் 3.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிப்பதற்கு செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |
| (iii) | 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2022/05 இன் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களின் 7.9 ஆம் பந்திக்கமைய நிதிக்காலப்பகுதி நிறைவடைந்து ஒவ்வொரு அறிக்கையிடும் | இந்நிலைமை நிதிக்கூற்றுக்களின் வழிகாட்டல்கள் உரிய முறையில் தெளிவுபடுத்தப்படாமையால் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் மீண்டும் இவ்வாறானதொரு தவறு இடம்பெறாது இருப்பதற்கு உரிய விடயப்பொறுப்பு உத்தியோகத்தருக்கு | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

| | | |
|---|---|---|
| நிறுவனத்தினாலும் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட காசு மீதி, நிதிநிலைமைக் கூற்றின் காசு மற்றும் காசுக்கு சமனானவற்றின் மீதிக்கு உள்ளடக்கப்பட கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தினால் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட ரூபாய்.39,670,090 பெறுமதியானது 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக நிதி நிலைமைக்கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமனானவற்றின் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | அறிவித்து அறிவுரை வழங்கப்பட்டது. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஜூலை 22 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க பொது நிதிக் கொள்கை சுற்றிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றம் அடையும் பொருளாதார நிலைமை மற்றும் உள்ளபடியான வருமான செயற்படு தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் வருமான மதிப்பீடுகள் தொடர்ச்சியாக திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதும் அதற்கு இணங்க செயற்பட்டிராமையால் செயலகத்தின் மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மதிப்பபிடப்பட்ட வருமான மதிப்பீட்டின் சதவீதமாக 66 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானம் பணிப்பாளர் நாயகத்தின் பேரில் 2022 செப்டம்பர் 08 ஆம் திகதி முதல் புதிய வருமானத் தலைப்பொன்றின் கீழ் சேகரிக்கப்படுகின்றது. அதனால் வருடாந்த கணக்குகளை தயாரிக்கும் போது செப்டம்பர் 08 ஆம் திகதியின் பின்னர் சேகரிக்கப்பட்ட வருமானம் மாத்திரம் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கு வருகை தரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்தமையால் இறுதிக் காலாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் வருமான மதிப்பீடு நிதிப்பிரமாணம் 85(i)(இ) இன் பிரகாரம் மிகவும் துல்லியமாக தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய செயலகத்தினால் வருமான மதிப்பீடு துல்லியமாக தயாரிக்கப்பட வேண்டும் என்பது. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயலகத்தின் 2022 ஆம் ஆண்டின் செயலவினப் பேரேட்டை பரிசோதித்த போது செயலவின விடயங்களுக்கு உரித்தற்ற செயலவினங்கள் உள்ளடக்கப்பட்டமையால் அச்செயலவினங்கள் செயலவின விடயங்களின் செயலவினங்கள் குறைத்து / அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு. | | |
| (i) | 1409 ஆம் இலக்க செயலவின விடயத்திற்கு உள்ளடக்கப்பட வேண்டிய 04 செயலவின சந்தர்ப்பங்களின் பெறுமதி ரூபாய்.268,448 ஆன போதிலும் அந்த செயலவின விடயங்களின் சேமிப்பு ரூபாய்.40,960 ஆனமையால் அந்த செயலவின விடயங்களின் நிதியேற்பாட்டினை விஞ்சி ரூபாய்.227,488 ஆன செயலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | யாழ்ப்பாணம் உப அலுவலகத்திற்கு உரிய பாதுகாப்பு சேவைக்கான பெறுகை நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டின் வரவு செயலவுத் திட்டத்தை தயாரித்த பின்னர் மேற்கொள்வதற்கும் வரவு செயலவு திட்ட மதிப்பீட்டின் மூலம் கோரப்பட்ட நிதியேற்பாட்டுக்கு ஒப்பாக போதிய நிதி ஏற்பாடு வரவு செயலவு திட்ட திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிராமையும் 336-2-1-0-1409 ஆம் இலக்க செயலவின விடயத்திற்கான நிதியேற்பாடு எஞ்சியமைக்கு காரணமாக அமைந்துள்ளது. | நி.பி 50 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய முறையில் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |
| (ii) | 1403 மின்சாரம் மற்றும் நீர் செயலவின விடயத்திற்கு ரூபாய்.153,489 கணக்கு வைக்கப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும் அச்செயலவின விடயங்களின் சேமிப்பானது ரூபாய்.2,272 ஆனமையால் ரூபாய்.151,217 ஆன செயலவினம் நிதி ஏற்பாட்டினை விஞ்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டனுள் அரசின் நீர் பட்டியல் கட்டணங்கள் அதிகரித்த காரணத்தால் 336-2-1-1403 செயலவின விடயத்திற்கு அங்கீகரித்த நிதியேற்பாட்டினை விஞ்ச நேர்ந்திருந்தது. | நி.பி 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் உரிய முறையில் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நி.பி 66 இன் கீழ் மாற்றல் செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டுக்கமைய ஆண்டின் இறுதி அளவில் 04 செயலவின விடயங்களின் ரூபாய்.1,430,062 ஆன நிதியேற்பாடு பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்ததுடன் திருத்தப்பட்ட நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு 25 சதவீதம் முதல் 151 சதவிதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | ஆண்டின் ஆரம்பத்தில் உள்ள காலாண்டின் அடிப்படையில் நிதியேற்பாடு வழங்கப்பட்டதுடன் இறுதி காலாண்டளவில் 2022 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வரவு செயலவுத் திட்டத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டின் மேலதிக நிதியேற்பாட்டுடன் வரவு செயலவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் அது வரையிலும் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளில் செயலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அந்த செயலவினத் தலைப்பில் மேலதிக நிதியேற்பாடு எஞ்சியுள்ளது. | நி.பி 50 இன் பிரகாரம் செயலவின மதிப்பீடுகள் கூடிய அளவு நடைமுறை சாத்தியமான அடிப்படையிலும் துல்லியமானதாகவும் மேற்கொள்வதற்கு செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |
| (இ) | தேறிய நிதியேற்பாட்டில் 25 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையிலும் சேமிப்புடனான 08 மீண்டெழும் செயலவின விடயங்களின் ரூபாய்.1,678,360 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 3/2021 வரவு செயலவுத் திட்ட சுற்றறிக்கை மற்றும் 3/2022 சுற்றறிக்கைக்கமைய செயலவினங்கள் மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் இந்த சேமிப்புகள் ஏற்பட்டிருந்தது. | நி.பி 50 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய முறையில் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

## 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயலகத்தில் 2022 டிசம்பர் 31 திகதியில் உள்ள படியாக கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் கூற்று (பின்னிணைப்பு – iii) மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான செயலவின கூற்று ACA-2(ii) இன் பிரகாரம் 02 செயலவின விடயங்களுக்கான சேமிப்பினை விஞ்சி ரூபாய்.257,759 ஆன பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | 2022 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்கு பிரிவிற்கு கிடைத்திருந்த உறுதிச்சீட்டுக்களை பகுப்பாய்வு செய்தமையால் குறித்த பொறுப்புக்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள செயலவினங்களுக்கு உரிய உறுதிச்சீட்டுக்கள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட பின்னர் கிடைத்தவை ஆகும். | நி.பி. 94 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு இல்லாது செயலகத்தினால் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படக்கூடாது என்பது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கணக்காய்வு தெரிவு பரிசோதனைக்கு அமைய 2022 ஆம் ஆண்டுக்காக 07 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபாய்.374,042 ஆன பொறுப்புக்கள் 2023 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் தீர்க்கப்பட்டிருந்ததுடன் இச்செயலவினங்கள் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் பொறுப்புகளாக உள்ளடக்கப்பட்டிராததுடன் அவற்றுள் இரண்டு செயலவின விடயங்களுக்கு உரியதாக ரூபாய்.51,542 சேமிப்பு எஞ்சி இருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்கு பிரிவிற்கு கிடைத்திருந்த உறுதிச்சீட்டுக்களை பகுப்பாய்வு செய்தமையால் குறித்த பொறுப்புக்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள செயலவினங்களுக்கு உரிய உறுதிச்சீட்டுக்கள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட பின்னர் கிடைத்தவை ஆகும். | அனைத்துப் பொறுப்புகளும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் நி.பி 94 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடுகள் இல்லாது செயலகத்தினால் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படக்கூடாது என்பது. |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தில் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய செயலகத்தின் நிதி கட்டுப்பாட்டிற்கான ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்பு ஒன்று தயாரிக்கப்பட்டு பேணி செயல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்தக் கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலகாலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதற்கமைய கட்டமைப்பினை விளைவுள்ளதாக மாற்றி அமைப்பதற்கு உரிய வேறுபாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும் அவ்வாறான மீளாய்வுகள் | துறைமுகங்கள், கடல் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளரினால வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்பு பேணிச் செயல்லப்படுவதற்குரிய உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படும். | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவு ஏற்பாடுகளுக்கமைய செயலகம் செயல்பட வேண்டும் என்பது. |

மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுகள் எதுவும் கணக்காய்க்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 30/2016 - 3.3 ஆம் பந்தி | செயலகத்தின் வாகனங்களுக்கு எரிபொருள் பயன்பாடு மற்றும் பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் அளவு தொடர்பிலான குறிப்புகள் பேணிச் செயல்லப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பேணி செயல்லப்பட்டிருக்கவில்லை. | வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு மற்றும் பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் அளவு தொடர்பிலான பரிசோதனை ஒன்று மற்றும் அதற்குரிய ஆவணங்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | 2017 ஜுன் 28 ஆம் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 | நிதி அல்லாத சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தல் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள தகவலுக்கமைய உரிய காலாண்டின் இறுதியில் கொன்ரோலர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் செயலகத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளடியான நிதி நிலைமை கூற்றில் SA-82 மாதிரியில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ரூபாய்.94,915,801 அபறுமதியான | நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பிலான பதிவேட்டிற்கு உட்படுத்தல் தற்போது இடம்பெறுவதுடன் எதிர்காலத்தில் உரிய அனைத்து விபரங்களும் கொன்ரோலர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு உரிய பணிகள் இடம்பெறுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சொத்துக்களுக்கு உரிய விபரங்கள் கொன்ரோலர் நாயகத்திற்கு அறிக்கை இடப்பட்டு இருக்கவில்லை. | | |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 04 ஆம் பந்தி | கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் தமது நிறுவனத்திற்கு சாட்டப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் அலுவல்களுக்கு அமைய எதிர்வரும் வருடத்தின் மூலதன மற்றும் மீண்டெழும் நிகழ்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் செயலகத்தினால் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் பணிகள் தொடர்பில் செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 03 ஆம் பந்திக்கமைய வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தினை தயாரித்தல் தொடர்பிலான வழிகாட்டி இலக்கம் 12 செயல் நடவடிக்கை திட்டத்தினுள் வருடாந்த செயற்பாடுகளுக்கான | 2022 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தினுள் பிரதான நிறுவனப் பணிகளான கட்டு நிதி தேவைப்பாடு, காலச்சட்டகம் ஆகியவற்றுக்கு எதிர்பார்த்த அடைவு அல்லது பெறுபேறு உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. அச் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரதி ஒன்று | அரச நிதி சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கு அமைய முறையான வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் உள்ளடங்க வேண்டிய போதிலும் அவ்விடயங்கள் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் குறித்த ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டினை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டம் (Activity Plan) செயற்படுத்தப்படும் காலச்சட்டகம் (Time Line) மற்றும் அச் செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்த்த அடைவு / பெறுபேறு (Output/Outcome) உள்ளடங்க வேண்டிய போதிலும் அதற்கு அமைய முறையான செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று செயலகத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கு இணைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | செயலகத்தின் தூரநோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிறுவனத்தின் பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்கு உரிய செயற்பாடுகளை உள்ளடக்கிய செயல் நடவடிக்கை திட்டம் முறையாக தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட ஒரு செயல் திட்டமான “ILO உடன்படிக்கைக்கு இணங்க உயிரளவையியல் பிரிவுகளை ஒன்றிணைத்து அனைத்து இலங்கை கடற்படையினருக்கும் அடையாள அட்டைகளை வழங்குதல் (SID)” தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் | 2022 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள செயல்திட்டங்களுக்கு மாத்திரம் செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் பிரதான பணிகளுக்கான செயல் நடவடிக்கை திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. | தூரநோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்ளுதல் தொடர்பில் செயலகத்தின் பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்கு உரிய செயற்பாடுகளை உள்ளடக்கி அரச நிதி சுற்றறிக்கைக்கமைய முறையான செயல் நடவடிக்கை திட்டம் ஒன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | 2022 ஆம் ஆண்டிற்குரிய வேறு எந்த செயற்பாடும் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான வரைபு ஆண்டு அறிக்கையின் பிரகாரம் 12 பிரதான பணிகள் மற்றும் 4 குறுங்காலத் திட்டங்களில் இருந்து எதிர்பார்த்த இலக்குகளாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த பிரதான பணிகள் மற்றும் இலக்குகளை செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கியிராத காரணத்தால் செயலகத்தின் செயலாற்றலை பரிசோதிக்க முடியாது இருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள செயல்திட்டங்களுக்கு மாத்திரம் செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் பிரதான பணிகளுக்கான செயல் நடவடிக்கை திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. | செயலகத்தின் பிரதான பணிகள் மற்றும் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள இயலுமான வகையில் அரச நிதி சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கு அமைய முறையான செயல் நடவடிக்கை திட்டம் ஒன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் மூலம் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்திற்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள 03 வாகனங்கள் காணப்படுவதுடன் அவ்வாகனங்கள் செயலகத்தின் பெயரில் சுவீகரிக்கப்பட்டு கணக்குகளில் எடுப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 3 வாகனங்கள் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் மூலம் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்திற்கு தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் அவ்வாகனங்களை இந்த செயலகத்திற்கு சுவீகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளன. | முறையான நடைமுறைகளுக்கு அமைய சொத்துக்களை சுவீகரித்து அச்சொத்துக்களை சரியாக கணக்கு வைப்பதற்கு செயலகத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | 2022 டிசம்பர் 13 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2022/05 இன் நிதி கூற்றுக்களை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களின் கீழ் 8.2 ஆம் பந்திக்கமைய | வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் யாழ்ப்பாணம் உப அலுவலகம் மற்றும் தியத்மஹ நிறுவப்பட்ட காணி வணிகக் கப்பற்றுறைச் செயலகத்திற்கு 2022.11.14 ஆம் திகதியே | நிதி கூற்றுக்களை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களுக்கு அமைய செயலகத்தின் சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| “தொடர்ந்து அறிக்கையிடப்பட வேண்டிய நிதி அல்லாத சொத்துக்கள் காணப்படின் அவற்றை உரிய முறையில் இனம் கண்டு கிரயத்திற்கு அல்லது கிரயத்தினை இனங்கான முடியாத சந்தர்ப்பங்களில் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் கணக்கு வைக்க வேண்டிய போதிலும்'' செயலகத்திற்குரிய 2 காணிகளின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து நிதி கூற்றுகளில் உள்ளடக்காத காரணத்தால் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான நிதிநிலைமை கூற்று ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியானது அந்த அளவினால் குறை கணிப்பீட்டிற்கு உள்ளாகி இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த காணியின் உரித்துறுதிகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | சுவீகரிக்கப்பட்டிருந்தமையால் அந்த இரு காணிகளினதும் பெறுமதியினை மதிப்பீடு செய்ய போதுமான காலம் இல்லாத இருந்தமையால் 2022.12.31 ஆம் திகதியில் உள்ளபடியாக நிதிநிலைமை கூற்றில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்ததுடன் தற்போது அவ்விரு காணிகளின் பெறுமதியினையும் மதிப்பீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளது. | வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யாழ்ப்பாணம் சுற்றுலா விடுதியின் 277 சதுர மீட்டர்கள் அளவிலான 2 தளங்களில் நிறுவப்பட்டிருந்த போதிலும் அதன் கோரிக்கையாளர்களுக்காக 2020 ஆம் ஆண்டு முதல் ஒதுக்குவதற்கு முறையான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் விளைவற்ற சொத்து ஒன்றாக காணப்படுவதுடன் அதிலிருந்து அரசாங்கத்திற்கு பெற வேண்டிய வருமானம் | தற்போது யாழ்ப்பாணம் உப அலுவலகத்தில் கடமைகளுக்காக உதவி அரச கப்பல் கண்காணிப்பாளர் ஒருவர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் மேற்கொள்வதுடன் அந்த அலுவலகத்திற்கு எதுவித ஆரம்ப தரத்திலான ஊழியரும் இணைப்பு செய்யப்படவில்லை. உப அலுவலகத்தின் சுற்றுலா விடுதியைப் பேணி செல்வதன் மூலம் | உரிய மனித வளத்தினை பூர்த்தி செய்து யாழ்ப்பாணம் சுற்றுலா விடுதியை கோரிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு மற்றும் வருமானம் ஈட்டுவதற்கு செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

| | | |
|---|---|---|
| இழக்கப்பட்டு இருந்தது. | வருமானத்தை ஈட்டுவதற்கான சேவை தேவைபாட்டினை கருத்தில் கொண்டு ஆரம்ப சேவை தரத்திலான சுற்றுலா விடுதி பொறுப்பாளர் பதவி 01 மற்றும் சுற்றுலா விடுதி உதவியாளர் பதவி 01 பதவியணிக்கு இணைப்பு செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்திலிருந்து அல்லது ஆரம்ப சேவைகள் தரத்தில் பயிற்சி பெற்ற இருவரை இணைப்புச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவி அணிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு. | அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட மட்டத்திலான பதவிகள் இடையே வெற்றிடமாக காணப்பட்ட கடல்சார் தொழில் வல்லுனர்களின் 05 பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கு 2022.09.02 ஆம் திகதி வர்த்தமானி மூலம் விண்ணப்பம் கோருவதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்டது. அரச கப்பல் கண்காணிப்பாளர் (துறைமுகம்) பதவியில் சேவை ஆற்றிய உத்தியோகத்தர் பணிப்பாளர் (கப்பற்றுறை) பதவிக்கும், அரச கப்பல் கண்காணிப்பாளர் சேவை பதவியில் சேவையாற்றிய உத்தியோகத்தர் பணிப்பாளர் (பொறியியலாளர்) பதவிக்கும் 2023.02.15 ஆம் திகதி முதல் உள்ளக பதவி உயர்வு மூலம் நியமிக்கப்பட்டிருந்தனர். | செயலகத்தின் உத்தேச பதவி அணி மற்றும் பணிகளை மிகவும் திறமையாக மேற்கொள்வதற்கு மனித வளத்தினை உச்சமாகவும் செயற்திறனாகவும் பேணி செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடமான பதவியணி |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 24 | 10 | 14 |
| மூன்றாம் நிலை | 04 | 01 | 03 |
| இரண்டாம் நிலை | 56 | 53 | 03 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆரம்ப நிலை | 30 | 03 | 27 | இதுவரையிலும் 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைக்கமைய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள முடியாது. |
| | **114** | **67** | **47** | |

இதற்கமைய 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான செயலகத்தின் சிரேஷ்ட மட்டத்திலான பதவியணியில் 58 சதவீதம் மற்றும் ஆரம்ப மட்டத்திலான பதவியணியில் 90 சதவீதமான வெற்றிடங்கள் நிலவின.

குறித்த பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை இணைப்பு செய்வதற்கு அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் கோரப்பட்டுள்ளதுடன் சில பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை அதிகரிப்பதற்கு முகாமைதுவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி கோரப்பட்டுள்ளது.